முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர், வேலூர் மாவட்டம்

**ஐ.டி.எண். 08/2026**
**12.08.2026**

**நி.த.சாட்சி – 1 திரு.ராஜகுமாரன்..**

**குறுக்கு விசாரணை**

கோவிந்தசாமி 01.11.2019 ஆம் தேதி ஓட்டுனராக பணிபுரிந்த பொழுது விபத்து ஏற்படுத்தி உயிர் சேதம் ஏற்பட்டதால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து பேருந்தில் பயணம் செய்த பயணிகளை நாங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் கொடுத்த அறிக்கையின் பெயரில் தான் குற்றச்சாட்டு வணயப்பட்டது என்றால் சரிதான். விபத்தின் பொழுது ஆய்வாளர் சம்பவ இடத்தில் இல்லை விபத்துக்கு பின்னர்தான் சம்பவ இடத்தை ஆய்வு செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். இறந்த வையாபுரியால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் ஓட்டுநர் இந்த வாகனத்தை கவன குறைவாக ஓட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஓட்டுனரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. உள்துறை விசாரணையில் கோவிந்தசாமி விசாரணை செய்யப்பட்ட பின்னர் நிர்வாகம் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியதில்லை என்று சொல்லப்பட்டது என்றால் சரிதான். கோவிந்தசாமி கொடுத்த முதல் விசாரணை ஏற்புடையதாக இருந்த காரணத்தினால் தான் அவரை கூட்டு விசாரணை செய்ய தேவை இல்லை என்று தெரிவித்தோம் என்று சொன்னால் சரியல்ல. உள்துறை

விசாரணையில் அளிக்கப்பட்ட வாக்குமூலம் மற்றும் ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் விசாரணை அதிகாரி ஓட்டுனர் மீது குற்றச்சாட்டு நிறுபனமானதாக தவறான முடிவு கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் கோவிந்தசாமிக்கு வழங்கப்பட்ட மூன்று வருட ஊதிய உயர்வு நிறுத்தலை நீக்குரவு செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. விசாரணை அதிகாரியின் தவறான பைண்டிங்ஸ் வைத்து கொடுக்கப்பட்ட 3 வருட ஊடிதய உயர்வு நிறுத்தல் ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இரண்டாவது பக்கத்தில் முன்பணிக்கால தண்டனை குறித்த விபரம் சொல்லப்பட்டுள்ளது அதில் ஆறாவதாக சொல்லியுள்ள தண்டனை இந்த வழக்கில் உண்டானது என்று சொன்னால் சரிதான். முன் பணி காலத்தை கணக்கில் கொள்ளாமல் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை ஏற்புடைய தல்ல என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை ரத்து செய்து அதன் மூலமாக அவருக்கு வரவேண்டிய பண பயன்களை அளிக்க கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

PACKIAJOTHI Digitally signed by PACKIAJOTHI Date: 2026.08.12 16:38:11 +0530

Presiding Officer